### தி.மு.க. பவள விழா மற்றும் கழக முப்பெரும் விழாவில்

# சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக்குட்பட்ட 9 வட்டங்களைச் சார்ந்த கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்பீர்!

## பகுதிக் கழகச் செயலாளர் வி.இ.மதியழகன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, செப்.17 -

சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக்குட்பட்ட 9 வட்டங்களை சார்ந்த கழக தோழர்களுக்கு பகுதி கழக செயலாளரும், மண்டலகுழு தலைவருமான வி.இ.மதியழகன் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கழக பவள விழா மற்றும் முப்பெரும் விழாவினை சிறப்பாக கொண்டாட வேண்டுமென்று கழக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்ட ஆலோசனைப்படி செப்டம்பர் 15 ந் தேதி அன்று கழக தோழர்கள் இல்லங்களிலும், அலுவலகங்களிலும், வணிக வளாகங்களிலும், கழக இரு வண்ணக் கொடிகளை ஏற்றிடுமாறும், வீதிகளிலுள்ள கழக கொடிக்கம்பங்களை இரு வண்ணங்கள் பூசி புதுப்பித்து கழக இருவண்ணக் கொடி ஏற்றி, பட்டொளி வீசி, பறக்க செய்திடுமாறும் செப்டம்பர் 17ந் தேதி செவ்வாய்க்கிழமையன்று மாலை 5 மணிக்கு சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற உள்ள பவள விழா மற்றும் முப்பெரும் விழாவிற்கு சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்றிடுமாறும்

செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்தநாளையும், செப்டம்பர் 17 பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 146 வது பிறந்த நாளையும் முன்னிட்டும், தமிழர்களுக்கான இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாளை முன்னிட்டும் முப்பெருவிழாவாகவும், பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிகாக்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் அரசியல் பேரியக்கம் 75 ஆண்டுகளாக நிறைவு பெற்று மக்களுக்கு பணியாற்றி இந்த 2024 ஆம் ஆண்டு பவள விழா ஆண்டாக கொண்டாடப்படுகின்றன.

சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வரவேற்பிலும், கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தி.மு.க. பவள விழா மற்றும் முப்பெரும் விழா நடைபெற உள்ளது.

தமிழகத்தின் முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருது மற்றும் பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்.

எனவே இவ்விழாவிற்கு சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக்குட்பட்ட 9 வட்டங்களை சார்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞரணி அணி நிர்வாகிகள், வட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள் ஆகியோர் இவ்விழாவில் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்து தருமாறு சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி கழக செயலாளரும், மண்டல குழு தலைவருமான வி.இ.மதியழகன் எம்.சி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி 21 வது வார்டு சபை கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கி பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டு அறிந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார் இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி. உதயகுமார் மாநகராட்சி ஆணையர் எஸ்.கந்தசாமி துணை ஆணையர் சங்கரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநகர பொறுப்பாளர் சன். பிரகாஷ், மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி பகுதி கழகச் செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன் மாமன்ற உறுப்பினர், வீரபாண்டியன் வட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரவிக்குமார் உள்பட அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பலர் உள்ளனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

# பம்மல் வடக்கு பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் வேண்டுகோள்!

சென்னை, செப்.17

பம்மல் வடக்குப் பகுதிச் செயலாளர் திருநீர்மலை த. ஜெயகுமார் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் (1809 2024 - புதன்கிழமை) மாலை 4.00 மணியளவில் S.S.மகால், பம்மலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதி அவைத் தலைவர் கே.சந்திரன் தலைமை வகிக்கிறார்.

எஸ்.கே.நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, சி.பார்த்தசாரதி, இரா. குமரேசன், இரா.பாபுஜி, க.சுந்தரமூர்த்தி, மு.நித்யானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் நான் (பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார்) வரவேற்புரையாற்றுகிறேன்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா. மோ. அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் திருமதி க.வசந்த குமாரி, துணை மேயர் கோ. காமராஜ், வே. கருணாநிதி, அ.தமிழ்மாறன், இரா.நரேஷ் கண்ணா, வ.விஜயரங்கன், பொன்.சதாசிவம், கோல்டு டி.பிரகாஷ், பேராசிரியர் எல். பிரபு, பி.கே.ஏ.சத்தியபிரபு, ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம். ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். பகுதிப் பொருளாளர் ச.பிரபு நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் பம்மல் வடக்கு பகுதிக்கு உட்பட்ட தாம்பரம் மாநகர நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக்கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்ட மாநகர பகுதி வட்டக்கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி தகவல் தொழில்நுட்ப அணி உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் இன்று

# தந்தை பெரியார் பிறந்தநாள்! திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## பகுதிச் செயலாளர் என். சந்திரன் அறிக்கை!

சென்னை,செப்.17-

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 146-வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் மரியாதை செலுத்தப்படுகிறது. இதுகுறித்து பகுதிச் செயலாளர் என்.சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 146 வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (17.09.2024 செவ்வாய்க்கிழமை) காலை 8 மணியளவில் எம்.ஜி.ஆர். ரோடு ஸ்டேட் பேங்க் காலனியில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு குறு- சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளருமான தா. மோ. அன்பரசன் தலைமையில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, சமூக நீதி உறுதிமொழி ஏற்க இருக்கிறது.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், பகுதி வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணியினர், மாணவர் அணியினர், மகளிர் அணியினர்,மற்றும் கழகத் தோழர்கள், மூத்த கழக முன்னோடிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 12வது மண்டல குழு தலைவரும், ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளருமான என். சந்திரன் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூர் வடக்குப் பகுதி சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் பகுதி செயலாளர் ப.குணாளன், எம்.ஆர்.சீனிவாசன், பூபாலன், பிருந்தா ஸ்ரீ, கலாநிதி, பாபு குமார், கீர்த்தி ராஜ், உதயா, வாசிம், செந்தில், சஞ்சீவி, விக்கி, சந்தோஷ், ஜாகிர், கிரண், எம்.வி. குமார், ராஜா, ஸ்ரீதர், சகிம்சா, சரவணன், செல்வக்குமார், பாரூக், காஜா, முன்வர், கோபி,கார்த்திக், ராஜி, ஆட்டோ முரளி, ராஜவேல், கோவிந்தன், ஷெரிஃப், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

